முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1074

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.09.2022, புதன்கிழமை

1. ஞான சூட்சும மகாராஜனே
ஞானிகளை படைத்திட அவதாரம் புரிந்து
தானபலம் கொண்ட ஆறுமுக அரங்கனே
தர்மனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி தன்னை
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 22 நாள், 07.09.2022 புதன்கிழமை)
நாட்டிடுவேன் அரங்கன் வழி உலகம் தேற்றம் பெற
வானவர்கள் போற்றுகின்ற மாதர்மத்தை
வையகத்தில் நீயே விதைத்துள்ளாய்
3. தானபலம் உலகோர்க்கும் கூடகூட
தண்டாயுதன் என்னருள் யாவர்க்கும் கிட்டி
கிட்டியே அரங்கனுன் வழிகாட்டலில்
குறையில்லாத ஞான உலகம் இந்த லோகமடையும்
4. மாற்றம் தந்து காக்கும் மகா சக்தியாக
மரணத்தையே வென்று மீட்கும் உயர் சக்தியாக
ஆகவே அரங்கன் உன்பால் வரம் பல இருக்க
அனுகி உன்பால் உலகோர் தொண்டு செய்ய
5. தொண்டு செய்து அரங்கா முருகா என
தொடர்ந்து வந்தால் இந்த கலியுகத்தில்
உண்டாகும் ஞான யுகமாற்றம்
உயர் ஞானவான்கள் என்கின்ற படை மிகுந்து
6. மிகுந்து அரங்கன் உன் கருணையாலே
மேலான ஞானவான்கள் ஆட்சி
தகுந்தபடி இந்த உலகம் இனிதே கண்டு
தரணி எங்கும் ஞான ஆட்சி மலரக்கூடும்
7. கூடவே அரங்கனின் கருணை பார்வை
குவலயத்தார் அடையவே இந்த மாற்றம்
நாடெங்கும் கண்டு அற்புதம் காணும்
நாட்டிய சுப்ரமணியப்பெருமான் என் ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—